விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27

ஒலி 022 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 26 சனிக்கிழமை (10.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்

# யாழ்ப்பாணம் - திருமலை இடையே இன்று கடக்கும்

- வடக்கில் சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு
- கடும் வேகத்தில் காற்று வீசும்



வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், இன்று மாலை திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் கரையைக் கடக்கக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அனர்த்த முன்னெச்சரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அனர்த்த முன்னெச்சரிக்கை நேற்று மாலை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள ஆழ்ந்த காற்றழுத்தம் இன்று திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் கடந்து 15ஆம் பக்கம் பார்க்க

## பிள்ளைகளுக்கு துயர் கொடுக்காத கல்விமுறையை நாட்டில் உருவாக்குவோம் - ஜனாதிபதி

(அநுராதபுரம்)

பெற்றோருக்கு சுமையையும் பிள்ளைகளுக்கு துயரத்தையும் கொடுக்காத ஒரு கல்வி முறையை நாட்டில் 15ஆம் பக்கம் பார்க்க

## கனடாவில் வீதி விபத்து

### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் உயிரிழப்பு

(ரொரன்ரோ)

கனடாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரொரன்ரோ, இட்டோபி 15ஆம் பக்கம் பார்க்க

# தமிழர்களின் வரலாறு பாடத்திட்டத்தில் உள்வீர்ப்பு

## தமிழரசுக் கட்சி எம்.பிக்களிடம் பிரதமர் ஹரிணி உறுதி

(கொழும்பு)

தமிழர்களின் வரலாறுகள் பாடத்திட்டத்தில் உள்ளீர்ப்பு செய்யப்படுவதோடு வரலாற்று நூல்களிலும் சேர்க்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தமிழரசுக் கட்சி எம்.பிக்களிடம் உறுதியளித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க - ரஷ்யா இடையே பதற்றம்!

(அட்லாண்டிக்)

வெனிசுலா எண்ணெய் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த அமெரிக்கா தொடர்ந்து முயற்சித்து வரும் நிலையில், மற்றொரு எண்ணெய் தாங்கி கப்பலை பிரித்தானிய கடற்படையின் உதவியுடன் அமெரிக்கப் படை 04ஆம் பக்கம் பார்க்க

## பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

### புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணி நேற்று ஆரம்பம்



(அநுராதபுரம்)

டிட்வா பேரிடரால் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணிக்கும் 15ஆம் பக்கம் பார்க்க

## இறுதி யுத்தத்தில் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் மக்களுக்காக

### 2,500 வீடுகளை அமைக்கத் தீர்மானம்



(கொழும்பு)

இறுதி யுத்தத்தில் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் மக்களுக்காக 2,500 வீடுகளை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க 15ஆம் பக்கம் பார்க்க

## டக்ளஸ் பிணையில் விடுதலை

### வெளிநாடு செல்லத் தடை விதிப்பு

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிணையில் செல்ல அனுதிக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளது.

20 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் டக்ளஸ் விடுவிக்கப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## போதை மாத்திரைகளுடன் யாழில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

20 போதை மாத்திரைகளுடன் யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - அமெரிக்க உறவை வலுப்படுத்த அயராத முயற்சி

### விடைபெறும் ஜூலி சங்குக்கு விஜித ஹேரத் புகழாரம்



(கொழும்பு)

இலங்கை - அமெரிக்க உறவை வலுப்படுத்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் அயராத முயற்சி மேற்கொண்டார் என 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டில் நிழலின் நினைவுகள்



மண் மகிழ்வு 28 . 04 . 1946

விண் நெகிழ்வு 16 . 12 . 2022

## அமரர் இராசசிங்கம் குலசிங்கம்

திதி : தேய்பிறை அட்டமி

கண்முன்னே வாழ்ந்த சீரான காலம்
கனவாகிப் போனாலும்
நிழலாக எம்மோடு இருந்து வழிகாட்டும்
நினைவுகளே எம்மைத் தாலாட்டும்.

"இரஞ்சிதவாசா"
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(1905)

குடும்பத்தினர்

## மணமகள் தேவை

பிறப்பு – 1998 றோமன் கத்தோலிக்கம் RC
தகைமை – ARCHITECT AUSTRALIA
எதிர்பார்ப்பு – தகுதியான பெண்
சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

**076 003 4874**

(6531)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## மணல் விற்பனை/ பொமிட் போட்டு தரப்படும்

கட்டிட வேலைகளுக்கு அரச
அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு
மணல் விற்பனைக்கு உண்டு. மற்றும்
கனரக வாகனங்களுக்கு யாழ்
மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம்
போட்டு தரப்படும். 35000/=

(1910)

**076 324 9977**

## விற்பனைக்கு

பொங்கல் அகப்பை
(சிரட்டை)
விற்பனைக்கு உண்டு.



(6530)

**077 210 5286**

## காணி விற்பனைக்கு உண்டு


யாழ். கரவெட்டி நெல்லியடி சிக்னல்
சந்தியிலிருந்து கொடிகாமம் பிரதான
வீதியில் 500m தூரத்தில் 18 பரப்புக் காணி
இரண்டு பரப்பாக பிரித்து தரப்படும்.
குடியிருப்புச் சூழல், நன்னீரூற்று வளங்கள்
உண்டு. இந்தக் காணிகளை மொத்தமாகவும்
இரண்டாகவும் பிரித்தும் தரப்படும்.

இன்னும் மூன்று துண்டுகளே விற்பனைக்குள்ளது.
ஒரு பரப்பின் விலை 28 இலட்சம்

(6534)

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:
**077 639 4409, 076 153 2094**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 06.12.2025 அன்று இறைவனடி சேர்ந்த எமது குல தெய்வம்

### அமரர் கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 05.01.2026 திங்கட்கிழமை அதிகாலை கீரிமலையில் இடம்பெற்றது. நாளை 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு தங்களை அன்போடு அழைக்கின்றோம்.


இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(C-4789)

ஆச்சிரம வீதி,
நெல்லியடி கிழக்கு, அல்வாய்.
076 578 3004

தகவல் :
குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 . 04 . 1960

மறைவு 22 . 12 . 2024

### அமரர் கணபதி சிவஞானேஸ்வரன்

முருகன் கோவிலடி, புலோலி வடமேற்கைப் பிறப்பிடமாகவும் கூவில், புலோலி தென்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானேஸ்வரன் அவர்களின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

ஒரு ஆண்டாக முகம் காணாமல்
காலம் சென்றாலும்
தினமும் நினைவுகள் நெஞ்சில் பேசித்
தவிக்கின்றன
அப்பாவின் அன்பு நிழலாக
இன்றும் வாழ்கின்றது
எல்லை இல்லா தேடலில் உயிர்
வாழ்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-4788)

கூவில், புலோலி தென்மேற்கு.

குடும்பத்தினர்
077 193 0450

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்தியா தரைவழிப் பாதை; இலங்கையின் பதிலுக்காக காத்திருக்கிறோம்

## இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தரைவழிப் பாதைத் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் பதிலுக்காக தாம் காத்திருப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான தரைவழி போக்குவரத்து தொடர்பிலான யோசனையை, இலங்கை அரசாங்கமே முன்வைத்தது. அதனை முன்னெடுத்துச் செல்ல, இந்தியா தயாராக இருக்கிறது.

எனினும், இலங்கை அரசாங்கம் அது தொடர்பில் எவ்வித முன்னெடுப்புகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையான எட்கா தொடர்பிலும் இலங்கையின் பதிலை இந்தியா எதிர்பார்த்திருப்பாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான எரிபொருள் விநியோக கட்டமைப்புத் தொடர்பில் நிதியளிப்பு தொடர்பான ஆலோசனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பெருந்தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் 3300 வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன.


எனினும், எஞ்சிய 6700 வீடுகளை டித்வா பாதிக்கப்பட்ட அல்லது, எதிர் காலத்தில் அனர்த்தங்களினால் பாதிக்கப்படவுள்ள மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது. (நி)


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

கடந்த 26.12.2025 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

### நாகரட்ணம் மயில்வாகனம்



(ஓய்வு பெற்ற ஆசிரியர் – யாழ். பரியோவன் கல்லூரி,
சென் தோமஸ் கல்லூரி, கொள்ளுப்பிட்டி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 10.01.2026 இன்று சனிக்கிழமை "கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும்" தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வானது "அன்னாரின் இல்லத்திலும்" நடைபெற்று, ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நாளை 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் "யாழ் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்திலும்"நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


(C-4786)

95, செட்டித்தெரு, நல்லூர்.
070 221 9207/ 074 354 5115

தகவல்– குடும்பத்தினர்.



# மரண அறிவித்தல்



## சிறிஸ்கந்த குமாரன் இலட்சுமி

**தோற்றம்** 28.07.1961

**மறைவு** 04.01.2026

புங்குடுதீவு குறிகட்டுவானை பிறப்பிடமாகவும் முரசுமோட்டை, வட்டக்கச்சி ஆகிய இடங்களை தற்காலிக வதிவிடமாகவும் தற்போது புங்குடுதீவில் வசித்து வந்தவருமாகிய சிறிஸ்கந்த குமாரன் இலட்சுமி தேவி அவர்கள் கடந்த 04.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரெத்தினம் - ஜீலின் நோனா தம்பதிகளின் அன்புப்புதல்வியும்,கணேசராசா- ஶ்ரீபாரததேவி தம்பதிகளின் அன்பு மருமகளும், சிறிஸ்கந்த குமாரன் அவர்களின் பாசமிகு துணைவியும், துசிந்தா, ரஜிந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தரங்கன், இதயா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தவீனா, தவிசா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முனைப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

(1903)

3ஆம் வட்டாரம், பெருங்காடு,புங்குடுதீவு.
தொடர்பு : 076 3490567 ( கணவன் சிறி)
0777 293097 ( தம்பி சபா பரமேஸ்)

தகவல்:-
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்...

வளிம்ண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை விடுத்துள்ள எதிர் வரும் 36 மணி நேரத்திற்கான வானிலை முன்னறிவிப்பிற்கு அமைய வடமாகாணத்தின் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

இந்த ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் மட்டக்களப்பிலிருந்து கிழக்குத் திசையில் சுமார் 160 கிலோ மீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்தது.

நாட்டின் வடக்குப் பகுதியில் மேக மூட்டமான வானம் காணப்படுவதுடன், வட மாகாணத்திலும் அநுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## தமிழர்களின்...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய அவர்களுக்குமிடையில் விசேட சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது தமிழ்மொழி மூல வரலாற்று நூல்கள் மற்றும் பாடத்திட்டங்களில் தமிழர்களின் வரலாறுகள் நீக்கப்பட்டுள்ளமை பற்றி பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவற்றினை மீண்டும் பாடப் புத்தகங்களில் கொண்டு வரவேண்டும் என தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு, கிழக்குப் பல்கலைக் கழகங்கள் மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த ஆய்வாளர்களை இவ்விடயத்தில் தொடர்புபடுத்தி வரலாற்றுத் தகவல்களை தொகுத்து அவற்றைத் தமிழ்மொழி மூலப் பாடத்திட்டத்தில் உள்ளீர்ப்புச் செய்ய இதன்போது பிரதமருக்கு தெரிவிக்கப்பட்டது. விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் தமிழ் வரலாறுகள் பாடத் திட்டங்களில் உள்ளீர்ப்புச் செய்யப்படுமென பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் தமிழ்ப் பாடப் புத்தகங்கள் மற்றும் தரம் - 01 இற்கான பாடப் புத்தகங்களில் அதிக எழுத்துப் பிழைகள் காணப்படுவதாக இதன்போது பிரதமருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவற்றினையும் விரைவாகத் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார்.(ம-7,250)

## அமெரிக்க...

கள் கைப்பற்றியுள்ளன.

ஒலினா என்ற அந்த எண்ணெய்க் கப்பல், சமீபத்திய வாரங்களில் அமெரிக்காவால் கைப்பற்றப்பட்ட ஐந்தாவது கப்பலாகும்.

இதேவேளை நேற்று முன்தினம் வெனிசுலாவிலிருந்து போதைப் பொருள் கடத்தப்படுவதாகக் கூறி, ரஷ்யாவுக்குச் சொந்தமான "பெல்லா" என்ற எண்ணெய் கப்பலை அமெரிக்கா பறிமுதல் செய்ய முயன்றது. இதனால் அந்தக் கப்பலின் பெயரை "மரினோ என மாற்றி ரஷ்யக் கொடியுடன் சென்றபோது, அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் அமெரிக்க இராணுவத்தினர் அதை வழிமறித்துக் கைப்பற்றினர்.

இதற்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. கப்பலிலுள்ள தமது பிரஜைகள் மனிதாபிமான ரீதியில் நடத்தப்படவேண்டும். அமெரிக்கா இதுபோன்ற செயல்களை தொடர்ந்தால், தேவைப்பட்டால் ரஷ்யாவின் அணு ஆயுதக் கொள்கைப்படி பதிலடி கொடுக்கவும் தயாராக இருப்பதாக எச்சரித்துள்ளது.

ஏற்கெனவே உக்ரைன் போர் காரணமாக மோசமாக இருக்கும் ரஷ்யா - அமெரிக்கா இடையிலான உறவை இந்நடவடிக்கை மேலும் பாதிக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - அரியாலை ஆனந்தம் வடலி வீதியில் (AV வீதி)
3ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 1½ பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- AV வீதி முகப்புடன்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4 Km
- விலை பேசித் தீர்மானிக்கப்படும்

(1906)

தொடர்பு:-
076 860 2770, 0769878617




# வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் தேவை.
மேலும் சிட்டை எழுதுனர் அனுபவம் உள்ளவர்கள் ஆண், பெண் உடன் தேவை.

(6535)

076 028 9835, 077 5906 482


# 3ஆம் ஆண்டு நினைவேந்தல்



தோற்றம் 01.04.1950 | மறைவு 10.01.2023

அமரர்

## கைலாசபிள்ளை சீவரத்தினம் (பஞ்சலிங்கம்)

(யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி முன்னாள் ஆசிரியர்)

ஆண்டுகள் மூன்று
கடந்த போதிலும் உங்கள்
அன்பு முகம் என்றென்றும்
எம் கண் முன்னே...

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்:-
குடும்பத்தினர்

(1907)

# மரண அறிவித்தல்

## முத்துலிங்கம் செல்வராசா (ஈசன்)



மலர்வு 18.10.1962 | உதிர்வு 09.01.2026

சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் செல்வராசா (ஈசன்) அவர்கள் நேற்று 09.01.2026 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகரட்ணம் - தனலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் தமிழரசி அவர்களின் அன்புக் கணவரும் செல்வராணி, யோகராசா ஆகியோரின் சகோதரனும் கஜானன், கஜானி மற்றும் காலஞ்சென்ற சதுர்க்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கேதாரணி, கஜநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆத்மிகா, அபிநயா ஆகியோரின் பேரனும் திருமுருகராசா, மகேந்திரராஜா, காலஞ்சென்ற தமிழ்ச்செல்வி மற்றும் சுகந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

(C-4791)

தகவல்: குடும்பத்தினர்
077 593 7166

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை கலாநிதி.தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 101ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா கடந்த புதன்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சான்றோர்கள் ஐவருக்கு சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்த 29.12.2025 அன்று இடம்பெற்ற கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின்போது மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரன் தலைமையில் கிறீன்லேயர் (Greenlayer) சுற்றுச்சூழல் அமைப்பினால் ஆயிரம் முழு நெல்லிக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.



ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளுக்கு 3 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவப் பொருட்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.


# 60ஆவது பிறந்த தின நினைவஞ்சலி



## அமரர்.
## தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்
யாழ். கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

எங்கள் இதயத்துள்
நிறைந்து நிற்கும் அப்பாவே!
இன்று உங்கள் பிறந்த தினமல்லவா!
இன்பமாய்க் கொண்டாடும்
இனிய தினமல்லவா! – நீங்கள்
இல்லாமல் போனது தான் ஏனப்பா?
எங்களோடு நீங்கள் கழித்த
பிறந்த நாள் பொழுதுகள்
எங்கள் இதயங்கள் முழுவதும்
நிறைந்துள்ளன அப்பா!!!
முத்தான மூன்று பிள்ளைகளினதும்
பிறந்த நாள் வாழ்த்துக்கள் அப்பா!!!

பிள்ளைகள்:
பவதாரணி (மகள்), பிரணவன் (மகன்), பவித்திரா (மகள்)

தோற்றம் : 10.01.1966 மறைவு : 01.01.2008

தகவல்:- திருமதி விஜயகலா மகேஸ்வரன்
இல.32, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.தொலைபேசி : 011 2360679
இல.276, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 2221877

(C-4787)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டைக்காடு, முல்லைத்தீவு கடலில் இந்திய மீனவர்கள் அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பரப்பிலும் முல்லைத்தீவு கடற்பரப்பிலும் இந்திய இழுவைமடிப் படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுவருவதாகவும் அதனைத் தடுப்பதற்கு இதுவரை எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லை என அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

(யாழ்ப்பாணம்)

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், வடமராட்சி கிழக்கு கடற்பகுதி மற்றும் முல்லைத்தீவு உள்ளிட்ட கரையோரங்களில் சீரற்ற கால நிலையால் கடல் கொந் தளிப்பாக காணப்படுகிறது. இதன் காரணமாக மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்லவில்லை.

இதைச் சாதகமாக பயன்படுத்திய இந்திய இழுவை மடி மீனவர்கள் கட்டைக் காட்டு கடற்பரப்பிற்கு ஒரு கிலோமீற்றர் கரைக்கு அண்மையாக வருகை தந்து இழுவை மடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

வெற்றிலைக்கேணி, முல்லைத்தீவு வட்டுவாகல் மற்றும் சாலைப்பகுதிகளில் இலங்கை கடற் படையின் மிகப்பெரிய கடற்படைத் தளம் அமைந்திருக்கின்ற போதிலும் கடற்படைத் தளத்திற்கு அண்மையாக வந்து இந்திய இழுவை மடி படகுகள் எந்த வித பயமும் இன்றித் தொழில் செய்து வருகிறார்கள்.

இதன் காரணமாக மீனவர்களின் வாழ்வாதாரத்தை இந்திய இழுவை மடி மீனவர்கள் அழித்துச் செல்வதை தடுப்பதற்கு இதுவரை எந்த வித நிரந்தர முயற்சிகளையும் உரியவர்கள் எடுக்கவில்லை என மீனவர்கள் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-33-104)

## மகசீன் சிறைச்சாலை கைதிகளை பார்வையிட்ட ஸ்ரீ பவானந்தராசா எம்.பி




(கொழும்பு)

கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்கு நேற்று முன் தினம் வியாழக்கிழமை சென்ற யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராசா தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டுள்ளார்

அதன் போது அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குறைகளைக்கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் அரசியல் கைதிகள் முன் வைத்த கோரிக்கைகள் பிரச்சி னைகள் தொடர்பில் உரிய தரப்பினருடன் பேசி, அவற் றுக்கான தீர்வினை பெற்றுத் தர விரைந்து நடவடிக்கை எடுப்பேன் என கைதிகளுக்கு உறுதிய ளித்துள்ளார். (3-33)

## ஆட்டுத்திருடர் அகப்பட்டனர்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல பகுதிகளில் இரவு வேளைகளில் ஆடுகளைத் திருடி விற்பனை செய்த வந்த சந்தேக நபர்கள் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆட்டின் உரிமையாளர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்தே சந்தேக நபர்கள் இருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக் கிழமை கைது செய்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், குறித்த சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளின் மூலம் சென்று ஆடுகளைத் திருடி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிக்குச் சென்று ஆட்டின் பெறுமதியை விட அரை வாசி விலைக்கு விற்று வந்தனர். இந் நிலையில் சந்தேக நபர்களிடம் மெற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் ஐந்து ஆடுகள் ஆட்டு உரிமையாளரினால் இனங் காணப்பட்டதை அடுத்து தருமபுரம் பொலிஸாரால் குறித்த ஐந்து ஆடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். திசாநாயக்க தெரிவித்துள்ளார். (3-316)

## யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கு புதிய உதவி பிரதேச செயலாளர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கு புதிய உதவி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட துஷியா கஜமுகன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களிடம் நியமனக் கடிதத்தினைப் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் அன்றைய தினமே யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் தமது கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-33)

## திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பழங் கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு பேராசிரியர் சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் அனைத்து அடியவர்களையும் பங்குகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3)



வலி வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட 59 கர்ப்பவதிகளுக்கான மகப்பேற்றுப் பொதி வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கொல்லங்கலட்டியில் அமைந்துள்ள வலி வடக்கு பிரதேசசபையின் தலைமைக் காரியாலய சபை மண்டபத்தில் வலி. வடக்கு தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

(படம்-சிவசாந்தன்)

## களை நெல்லைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல்



(தருமபுரம்)

வடக்கு மாகாணத்தில் விவசாய செய்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள களை நெல்லை ஒன்றிணைந்து கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி வட்டக்கச்சி விவசாய பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வட மாகாண விவசாயத் திணைக்கள பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் இரணைமடு விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் எஸ். இராஜேஸ் கண்ணா, ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பிரதி விவசாயப் பணிப்பாளர்கள், மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், யாழ் பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர்கள் ,ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (3-316)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முந்தை அரசாங்கங்களால் மீளப்பெறப்பட்ட 65 வழக்குகள் மீண்டும் தாக்கல் பிரதமர்



(கொழும்பு)

2019, 2024 ஆம் ஆண்டு களுக்கு இடையில் மீளப் பெறப்பட்ட 65இற்கும் மேற்பட்ட வழக்குகள் தற்போதைய அரசாங்கத்தால் மீண்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேராவின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர், 2019 முதல் 2024 வரை இலஞ்ச ஒழிப்பு ஆணையம் மற்றும் சட்டமா அதிபரால் 102 வழக்குகள் மீளப் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பல்வேறு காரணங்களுக்காக முந்தைய அரசாங்கங்களின் போது மீளப் பெறப்பட்ட வழக்குகள், அவற்றை மறு பரிசீலனை செய்த பின்னர் மீண்டும் தாக்கல் செய்யப்படும் என்று தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் பிரச்சாரத்தில் உறுதியளித்ததாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

34 வழக்குகளை மீண்டும் தாக்கல் செய்வதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும், மூன்று வழக்குகளை மீண்டும் தாக்கல் செய்வது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். (நி)

## ஜோன்ஸ்டனுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அவரது இரண்டு மகன்கள் உட்பட ஐந்து சந்தேக நபர்களை ஜனவரி 23 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க வத்தளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



சதொச நிறுவனத்திற்கு சொந்தமான பாரவூர்தியை முறைகேடாக பயன்படுத்திய வழக்கு தொடர்பான விசாரணையின் போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி)


**அரசடி விநாயகர் ஆலயம்**
**82, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்**

**பழைய பாவித்த பொருட்கள் ஏல விற்பனை**

மேற்படி ஆலயத்தில் கீழ்காணும் பழைய பாவித்த பொருட்கள் 11.01.2026 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

பொருட்களை பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் பகல் 10.30 மணிவரையும்.

**பொருட்கள் விபரம்**

01. கொடிஸ்தம்பம் (செப்பு)
02. INVERTER(05k.w) அதற்குரிய பற்றி
03. குத்துவிளக்குகள்
04. பித்தளைக் குடங்கள்
05. மேலும் அலுமினியம், இரும்புப் பொருட்கள், சில்வர் பொருட்கள் என்பன.

ஆலய பரிபாலன சபை
021 221 7864

(6528)


## எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்றில் தோற்கடிக்கப்படும் லால்காந்த உறுதி

(கொழும்பு)

கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக எதிரணிகளால் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தேவையற்றது என்று அமைச்சர் கே.டி. லால் காந்த ஊடகங்களிடம் தெரிவித்தார்.

எதிரணிகள் அரசியல் நோக்கத்துடன் இந்தப் பிரேரணையை முன்வைக்கப் படவுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்படும் என்றும் அவர் உறுதியாகத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு பாராளுமன்றத்தில் போதிய பெரும்பான்மை இருப்பதால் எதிரணிகளின் முயற்சி வெற்றி பெறாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். கல்வி அமைச்சராக ஹரிணி அமரசூரிய மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் நாட்டின் கல்வி முறைமைக்கு சாதகமாக இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.



எனவே, எதிரணிகளின் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மக்களைத் தவறாக வழிநடத்தும் அரசியல் நாடகம் என்றும் அமைச்சர் லால் காந்த கடுமையாக விமர்சித்தார். (நி)

## தேர்தல்களில் வாக்களிக்காதவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும்

### தனிநபர் பிரேரணை முன்வைப்பு

(கொழும்பு)

வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்ட பின்னர் தேர்தல்களில் வாக்களிக்காதவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்று புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை யொன்றை கொண்டுவந்துள்ளார்.

ரவி கருணாநாயக்கவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வாக்குரிமையை இழந்த பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும். இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இலங்கைக்கு 10 ஹெலிகொப்டர்கள் இலவசமாக வழங்குகிறது அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கை விமானப்படைக்கு பத்து TH-57 (Bell 206 Sea Ranger) ரக உலங்கு வானூர்திகளை அமெரிக்கா இலவசமாக வழங்கவுள்ளதாக தனது பதவிக்காலம் நிறைவடைந்து செல்லவுள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இந்த உலங்கு வானூர்திகளுக்காக அமெரிக்கா எந்தக் கட்டணத்தையும் வசூலிக்காது.

மேலதிக பாதுகாப்பு தளபாடங்கள் திட்டத்தின் கீழ் இவை இலங்கைக்கு மாற்றப்படுகின்றன.

டித்வா சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது தேடல் மற்றும் மீட்புப் பணிகளில் உலங்கு வானூர்திகள் வகிக்கும் முக்கிய பங்கை தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த 10 உலங்கு வானூர்திகளும் விமானப்படையின் திறனை அதிகரிப்பதோடு, விமானிகளுக்கான பயிற்சிகளையும் மேம்படுத்த உதவும்.

இதன் மூலம் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனாக முன்னெடுக்க இலங்கை விமானப்படைக்கு வாய்ப்பு ஏற்படும்.

தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில், "இலங்கை விமானப்படைக்கு இந்த 10 உலங்கு வானூர்திகளை வழங்குவதில் அமெரிக்கா பெரு மகிழ்ச்சியடைகிறது" எனப் பதிவிட்டுள்ளார். (நி)


**GOETHE -INSTITUT**
**INTRODUCING GERMAN LANGUAGE COURSES AND EXAMS IN JAFFNA KÄLAM**

கலம் (Kälam) நிலையத்தில் ஆரம்பநிலையாளர்களுக்கான ஜேர்மன் மொழி வகுப்புகள் மற்றும் தேர்வுகள் அறிமுகம்.

ஆரம்பம்: ஜனவரி 12
முடிவு: மார்ச் 18
நாட்கள்: திங்கள், செவ்வாய், புதன்
மொத்த மணித்தியாலங்கள்: 105

விசேட கட்டணம்: 50,000 LKR (பாடப்புத்தகம் உட்பட)
பணம் செலுத்தும் முறை: வங்கிப் பரிமாற்றம் (Bank Transfer)

ஏன் கோதே-இன்ஸ்டிட்யூட்?
- சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- கோதே-இன்ஸ்டிட்யூட்டினால் சர்வதேச அளவில் பயிற்சி அளிக்கப்பட்ட விரிவுரையாளர்கள்.
- நவீன கற்பித்தல் முறைகளின் படி அமைந்த வகுப்புகள்.

கோதே-இன்ஸ்டிட்யூட்டில் ஜேர்மன் மொழி கற்பதற்கான காரணங்கள்:
- குடும்ப மீளிணைவு (Family Reunion)
- உயர்கல்வி
- ஜேர்மனியில் தொழிற்பயிற்சி
- திறன்மிக்க தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புகள்

மேலதிக விபரங்களுக்கு: 0771728385


GOETHE INSTITUT | Kälam | கலம்

(6513)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## "ட்ரம்பின் அடுத்த இலக்கு ஈரான்தான்"
### உறுதியாகச் சொன்ன பொருளாதார நிபுணர்





(வோஷிங்டன்)

"ட்ரம்பின் அடுத்த இலக்கு ஈரான்தான்" என பிரபல பொருளாதார நிபுணர் ஜெஃப்ரி சாக்ஸ் தெரிவித்துள்ளார்.

கிரீன்லாந்து எனப் பலரும் கணிக்கப்பட்டு வரும் நிலையில், அவருடைய இந்தக் கருத்து வந்துள்ளது.

போதைப்பொருட்களை அமெரிக்காவுக்குள் கடத்த வெனிசுலா உறுதுணையாக இருந்ததாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியது.

கடந்த 3ஆம் திகதி அந்நாட்டு இராணுவம் வெனிசுலாவில் தாக்குதல் நடத்தி, ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியா ஃபுளோரஸ் ஆகியோரைக் கைதுசெய்து அமெரிக்காவிற்கு நாடு கடத்தியது.


அங்கு அவர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.



மதுரோவைக் கைது செய்திருப்பதற்கு எதிராக ட்ரம்ப் உலக நாடுகளின் எதிர்ப்பைச் சந்தித்திருக்கும் நிலையில், அடுத்ததாக அவர், டென்மார்க் அரசின் கீழ் சுயாட்சியுடன் இயங்கும் கிரீன்லாந்து மீது கவனம் செலுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அடுத்த இலக்கு ஈரானாக இருக்கலாம் என பிரபல பொருளாதார நிபுணர் ஜெஃப்ரி சாக்ஸ் தெரிவித்துள்ளார். (நி)

## வெள்ளை மாளிகைக்கு வாங்க...!
### கொலம்பியா ஜனாதிபதிக்கு ட்ரம்ப் அழைப்பு



(வோஷிங்டன்)

கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோவை வெள்ளை மாளிகைக்கு வருமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த புதன்கிழமை அழைப்பு விடுத்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இரு நாடுகளுக்கிடையே பதற்றம் நிலவி வந்த நிலையில், இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 3ஆம் திகதி, அண்மை நாடான வெனிசுவேலாவில் நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து, பெட்ரோவை நோக்கி ட்ரம்ப் "உன்னை கவனித்துக்கொள்" என கடுமையாக எச்சரித்திருந்தார்.

வெனிசுவேலா தலைநகர் கராக்கஸில் திடீர் தாக்குதல் நடத்தி, அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியா ஃபுளோரஸை அமெரிக்க படைகள் சிறைப்பிடித்தன.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை கொலம்பியா - அமெரிக்கா நாட்டு தலைவர்களுக்கிடையே தொலைபேசி உரையாடல் நடைபெற்றது. ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், பெட்ரோவுடன் இடம்பெற்ற முதல் தொலைபேசி உரையாடல் இதுவாகும்.

79 வயதுடைய ட்ரம்ப், "போதைப் பொருள் பிரச்சினைகள் மற்றும் எங்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் குறித்து விளக்கமளிப்பதற்காக பெட்ரோ என்னை தொடர்புகொண்டார்" என தனது "ட்ரூத் சோஷியல்" சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.



"அவரது அழைப்பையும், பேச்சின் போக்கையும் நான் பாராட்டுகிறேன்.

விரைவில் வெள்ளை மாளிகையில் அவரை சந்திக்க எதிர்பார்க்கிறேன்" என ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமை அதிகாலை அமெரிக்க படைகள் வெனிசுவேலா தலைநகர் கராக்கஸில் உள்ள இராணுவ இலக்குகளை குண்டுவீசி தாக்கி, எண்ணெய் வளம் நிறைந்த அந்த நாட்டின் மீது வோஷிங்டன் தனது கட்டுப்பாட்டை உறுதி செய்யும் முயற்சியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## பழி...
## அமெரி... மூழ்கடி...

**(மொஸ்கோ)••••**
**"சர்வதேச கட... தங்களுடைய என... கப்பலை கைப்பற்... வுக்கு சொந்தமா... மூழ்கடிப்போம்" எ... எச்சரிக்கை விடுத்...**

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் இருந்தே அமெரிக்காவுக்குள் போதைப் பொருள் கடத்தப்படுவதாகக் கூறி, அந்நாட்டில் இருந்து எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்களை அமெரிக்கக் கடற்படை தடுத்து வருகிறது.

இதன்படி, ரஷ்யாவுக்கு சொந்தமான, "பெல்லா 1" என்ற

## பிரான்ஸ் ...
## இந்தியா ...



(பாரிஸ்)

பிரான்சில் கடந்த ஆண்டு சர்வதேசசெயற்கை நுண்ணறிவுசெயற்பாட்டு உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் ஜனாதிபதி மக்ரோனுடன், பிரதமர் மோடி பங்கேற்றார்.

அப்போது, இருதரப்பு பேச்சுவார்த்தை, வணிக நிறுவன தலைவர்களுடன் சந்திப்பு போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார்.

இந்த மாநாட்டில் பங்கேற்க இந்திய பிரதமர் நரேந்திர மோடி பிரான்ஸ் நாட்டில் அரசுமுறை பயணம் மேற்கொண்டுள்ளார்.

பாரீசில் உள்ள எலிசி அரண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...க்குப் பழி வாங்க துடிக்கும் ரஷ்யா

# ...ரிக்கக் கப்பல்களை ...டிப்போம் என சூளுரை!



**...டல் சட்டத்தை மீறி, ...எண்ணெய் டேங்கர் ...பற்றிய அமெரிக்கா ...மான கப்பல்களை ...' என்று ரஷ்யா கடும் ...த்துள்ளது.**



எண்ணெய் டேங்கர் கப்பலை பறிமுதல் செய்ய அமெரிக்கா தீவிரம் காட்டி வந்தது.

ஆனால் ரஷ்யா, "மரினேரா" என பெயர் மாற்றி தன் நாட்டு கொடியை ஏற்றி பாதுகாப்பு அளித்து வந்தது.

இருப்பினும் நேற்று முன் தினம் வட அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் இந்த எண்ணெய் டேங்கர் கப்பலை, அமெரிக்கக் கடற்படை கைப்பற்றியது.

இந்த நடவடிக்கையை ரஷ்ய வெளியுறவுத்துறை, சர்வதேசக் கடல் சட்டத்தின் மீறல் என்று கண்டித்துள்ளது.

ரஷ்ய எம்.பி, அலெக்சி ஜ°ராவ்லெவ், "அமெரிக்கா இதே நிலையைத் தொடர்ந்தால், அவர்களது கப்பல்கள் மூழ்கடிக்கப்படும்" என்று கடுமையாக எச்சரித்தார். (நி)

## ...ஜனாதிபதி ...ா விஜயம்



மனையில் பிரதமர் மோடிக்கு சிறப்பான வரவேற்பும், விருந்தும் அளிக்கப்பட்டது. இந்நிலையில், ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் செய்தி யாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், கடந்த ஆண்டு, நாங்கள் AI பற்றிய ஒரு உச்சி மாநாட்டை நடத்தினோம். உலகம் முழுவதும் எங்களைப் பார்க்க வந்தது.

பிரதமர் மோடியும் எங்களிடம் இருந்தார். அடுத்த மாதம், இந்த முயற்சிகளைத் தொடர நான் இந்தியா செல்கிறேன் என தெரிவித்தார். (நி)

## ஈரானில் தீவிரமடையும் போராட்டம் இணைய சேவைகள் முடக்கம்!

(டெஹ்ரான்)

ஈரானின் பொருளாதார நெருக்கடி மற்றும் ஆட்சிக்கு எதிரான பொதுமக்களின் போராட்டங்கள் தீவிரமடைந்து வருவதால், நாட்டில் இணைய சேவை மற்றும் தொலைபேசி இணைப்புகளை முற்றிலுமாக நிறுத்தி வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்றுக் காலை நிலவரப்படி, தலைநகர் டெஹ்ரான் உட்பட பல முக்கிய நகரங்களில் இரவு நேர போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.

அவற்றை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போராட்டங்கள் தொடங்கியதிலிருந்து ஈரானில் இணைய



சேவைகள் கடுமையாகக் குறைந்துள்ளதாக உலகளாவிய இணைய நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நெட்ப்ளொக்ஸ் உறுதிப்படுத்தியுள்ளது.

நாடு கடத்தப்பட்ட ஈரானிய பட்டத்து இளவரசர் ரெசா பஹ்லவி விடுத்த போராட்ட அழைப்பைத் தொடர்ந்து மக்கள் வீதிகளில் இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டுபாய், சிட்னி போன்ற வெளிநாட்டு நகரங்களில் உள்ள ஈரானியர்கள் தங்கள் உறவினர்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், வாட்ஸ்அப், ஃபேஸ்டைம் போன்ற சேவைகளும் முடங்கியுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகளவில்.....................


# கருப்பைவாய் புற்றுநோயால் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பலி

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் வருடாந்தம் சுமார் 6 இலட்சம் புதிய கர்ப்பப்பைவாய் புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன், 3 இலட்சத்து 40 ஆயிரம் பேர் உயிரிழப்பதாகத் தரவுகள் சுட்டிக்காட்டுவதாகச் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் சச்சிமாலி விக்ரம சிங்க தெரிவித்தார்.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தொடர்பாக கடந்த புதன்கிழமை சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். வைத்தியர் தொடர்ந்து தெரிவிக்கையில்:

கர்ப்பப்பை வாய் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை பெறும் பட்சத்தில் நோய் நிலைமையை முழுமையாகக் குணப்படுத்த முடியும். அதற்கான சிகிச்சை முறைகளும் பாரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளன.



எனினும் அது பற்றிய போதியளவான புரிந்துணர்வு இன்மையால் நாட்டில் வருடாந்தம் பல உயிரிழப்புகள் ஏற்படுவது கவலைக்குரிய விடயமாக உள்ளது. நோய் தொடர்பாகப் பொதுமக்களுக்குத் தெளிவூட்டுவதற்காக ஜனவரி மாதம் "கர்ப்பப்பை வாய் புற்றுநோய் விழிப்புணர்வு" மாதமாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

பெண்களிடையே அதிகமாக ஏற்படக்கூடிய புற்றுநோய்களில் மார்பகப் புற்றுநோய் முதலாவதாகவும், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் மூன்றாவதாகவும் பட்டியலிடப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி-பா: 35 உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L, Business
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15753

பிறப்பு: 1992-RC
உயரம்:5'6"
தகைமை/தொழில்: Banking Course, LLB, Executive Officer (Bank)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15183

பிறப்பு:1982- இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: O/L, Manager (pvt)
எதிர்பார்ப்பு-படித்தவர், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/15185

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி-பா: 37 3/4
7 இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்-Diploma, பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15761

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்: அத்தம்
3இல் சூரி செவ்
கிபா: 32 1/4 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, Manager (pvt)
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ: B/15186

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993-இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSC, Engineer (Newzealand)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15775

பிறப்பு:1995 -RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BFA,Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15604

பிறப்பு: 1997-இந்து
நட்சத்திரம்- அனுசம்
கி.பா: 10
உயரம் -5'3"
தகைமை/தொழில்: Bsc,MLT(PVT)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ : G/15779

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: மூலம்
5இல் சூரிசெவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில் -O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு (சுவிஸ்)
தொ.இ: G/15784

பிறப்பு-1991-RC
நட்சத்திரம்-சித்திரை
உயரம் -5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15606

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 517

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# அணுகுமுறை

ஒரு பெரியவர் உட்கார்ந்திருக்கிறார். அவரைச் சுற்றி அவருடைய தோழர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்.

ஏதோ ஒரு முக்கியமான செய்தியை, அவர் அவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர்களும் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்திலே யாரோ ஒரு ஆள் வேகமாக அங்கே வருகிறார். வந்த வேகத்திலேயே.. "எனக்கு ஏதாவது உதவி செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டே வருகிறார். கேட்கிறது உதவி, ஆனால் குரல் மிரட்டுறது மாதிரி இருக்கு.

இதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் ஆத்திரப்படவில்லை. ஆனால் அவரைச் சுற்றி இருந்தவர்கள் ஆத்திரப்பட்டார்கள்.

இதைப் பெரியவர் கவனித்தார். கொஞ்சம் அமைதியாக இருங்கள் என்றார். வந்தவரைக் கூப்பிட்டார், அவருக்கு சில பொருட்களைக் கொடுத்தார்.

என்னங்க, இப்ப உங்களுக்கு மகிழ்ச்சிதானே!" என்றார்.

ஓம் என்றார் அலட்சியமாக அவர்.

நான் உங்களை நல்ல முறையிலே நடத்தினேனா? என்றார்.

அதெல்லாம் ஒன்றுமில்லை என்றார் அவர். குரலில் கடுமை குறையவில்லை.

சுற்றியிருந்தர்களாலே இதைப்பொறுத்துக்க முடியவில்லை. கோபத்தோடு அவரை நோக்கி நெருங்க ஆரம்பித்தார்கள். பெரியவர் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்.

வந்தவரை என்னோடு வாருங்கள் என்று சொல்லி வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். அங்கே போனதும் இன்னும் சில பொருட்களை எடுத்து அவரிடம் கொடுத்தார்.

இப்ப, திருப்திதானே. நான் உங்களிடம் நல்ல முறையிலே நடந்து கொண்டேனா? என்றார். அவர் முகம் இப்பத்தான் மலர்ந்தது. "ரொம்ப நன்றி. இறைவன் உங்களது குடும்பத்துக்கு எல்லா நன்மைகளையும் செய்வார்" என்று சொன்னார்.

இதே வார்த்தைகளை என்னுடைய தோழர்களிடமும் வந்து சொன்னீர்கள் என்றால் அவர்கள் கோபம் தணிந்துவிடும். முடியுமா?" என்றார்.

கண்டிப்பா வருகின்றேன் என்றார். மறுநாள் காலையிலே அந்த இடத்திற்கு வந்தார்.

அதே மாதிரி சொல்லிவிட்டு அவர் போய் விட்டார். தோழர்கள் வியப்போடு பெரியவரைப் பார்த்தார்கள். அந்தப் பெரியவர் தான் நபிகள் நாயகம். அவர் சொன்னார்ஒருவர் அதிக ஆசையுடன் ஒரு ஒட்டகத்தை வளர்த்து வந்தார். ஒரு நாள் அந்த ஒட்டகம் கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடிப் போய்விட்டது. அக்கம் பக்கத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் அந்த ஒட்டகத்தை பிடிப்பதற்கு முயற்சி செய்து துரத்திக் கொண்டு ஓடினார்கள்.

ஒட்டகம் தாறுமாறாக ஓட ஆரம்பித்தது. இந்த சமயத்திலே அந்த ஒட்டகத்தை வளர்த்தவன் அங்கே ஓடி வந்தான்.

நீங்கள் அதை ஒன்றும் செய்ய வேண்டாம். அதனுடைய சுபாவம் எனக்குத் தெரியும் அதனை சுலபமாக என்னுடைய வழிக்கு கொண்டு வந்துவிட முடியும். நான் பார்த்துக் கொள்கின்றேன் விடுங்கள் என்றான். எல்லோரும் விலகிப் போனார்கள். இவன் என்ன செய்தான் தெரியுமா? கொஞ்சப் புல்லை எடுத்துக் கொண்டு ஒட்டகத்தை நெருங்கினான். அவ்வளவுதான். அது ஓடிவந்து இவன் காலடியிலே உட்கார்ந்துவிட்டது. செல்லமாக அதைத் தடவிக் கொடுத்தான். முதுகிலே ஏறி உட்கார்ந்து கொண்டான். தன் பாட்டிற்கு சாதுவாக நடந்து போகுது! இந்தக் கதையை நபிகள் நாயகம் தம்முடைய தோழர்களுக்குச் சொன்னார். "ஒட்டகத்தை மட்டும் அல்ல சில மனிதர்களையும் கூட சில விதத்துலே அணுகித்தான் அவர்களை சீர்திருத்த வேண்டியிருக்கு" என்பதை அவர்களுக்கு உணர்த்தினார்.

இது ஒரு அழகான உளவியல் அணுகுமுறை. சில குடும்பத் தலைவர்கள் கூட இந்த ஒட்டகம் மாதிரி நடப்பது உண்டு. பிறகு அடங்கிப் போவதும் உண்டு. ஒரு குடும்பத் தலைவர் காலையிலே எழுந்ததிலிருந்து சத்தம் போட்டுக் கொண்டு இருந்தார்.

பக்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் சமாதானம் செய்து பார்த்தார்கள். அவர் ஓய்வது மாதிரி தெரியவில்லை. கடைசியிலே அவரது மனைவி வந்தார். நீங்க எல்லாம் விலகிப் போங்க அவர் சுபாவம் எனக்குத் தெரியும். நான் பார்த்துக் கொள்கின்றேன் என்று சொன்னார். சரி என்று எல்லாரும் போய் விட்டார்கள். மாலையில் வந்து பார்த்தார்கள். அவர் சத்தமில்லாமல் ஒரு மூலையிலே உட்கார்ந்திருந்தார். ஆச்சரியமாக இருந்தது. என்னம்மா செய்தீர்கள் என்று கேட்டார்கள்.

ஒன்றுமில்லை ஒரு வேளை சாப்பாட்டை நிறுத்தினேன். பட்டினி போட்டேன். அவ்வளவுதான்

என்றார் அந்த அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் நிலவும் கல்வி சார் குறைபாடுகளுக்கு உரிய தீர்வை வழங்குக!

## பிரதமருக்கு ரவிகரன் எம்.பி கடிதம்

(நெளுக்குளம்)

**வன்னிப் பிராந்தியத்தில் நிலவும் கல்விசார் குறைபாடுகளை நேரடியாகப் பார்வையிடுவதுடன், குறித்த கல்விசார் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பிரதமர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய அவர்களிடம் கடிதமொன்றினைக் கையளித்துள்ளார்.**

பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை பிரதமர் ஹரிணி அமரசூரியவிற்கும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் சந்திப்பொன்று இடம் பெற்றது.

இச்சந்திப்பின்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் இக் கடிதத்தைக் கையளித்துள்ளார்.

அந்தவகையில் வன்னிப் பிராந்தியத்தில் நிலவும் அவசர கல்விசார் குறைபாடுகள் தொடர்பில் உடனடித் தலையீடு கோருதல் எனத் தலைப்பிடப்பட்டுள்ள இக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கல்வி மீதான வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது நான் எழுப்பிய விடயங்களைத் தொடர்ந்து, வன்னி தேர்தல் மாவட்டம் எதிர்கொள்ளும் நீண்டகால மற்றும் முறைமைசார் சவால்களை மீண்டும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எமது மாணவர்களின் எதிர் காலத்தைப் பாதிக்கும் பாரதூரமான வளப் பற்றாக்குறைகள் குறித்து உங்களின் உடனடித் தலையீட்டை நான் வேண்டுகிறேன்.



குறிப்பாக கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை, முற்றுப்பெறாத மற்றும் கைவிடப்பட்ட பாடசாலைக் கட்டுமானங்கள், இலக்கமுறை இடைவெளி மற்றும் தகவல் தொழில்நுட்ப நெருக்கடி, சுகாதார வசதி குறைவுகளால் பாடசாலைகளில் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள், கற்றல் பெறுபேறுகளிலுள்ள ஏற்றத்தாழ்வு உள்ளிட்ட மிக முக்கியமான குறைபாடுகள் வன்னியில் காணப்படுவதாகவும் அக் குறைபாடுகளை நேரடியாக பார்வையிட்டு உடனடியாகத் தீர்வை வழங்குமாறு கோரியே பாராளுமன்ற உறுப்பினரால் இவ் வாறு பிரதமரிடம் கோரிக்கைக் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வன்னிப் பிராந்தியத்தில் உள்ள எந்தவொரு குழந்தையும் நாட்டின் முன்னேற்றப் பயணத்தில் பின்தங்கிவிட மாட்டார்கள் என்பதை உங்கள் தலைமை யின் கீழ் உறுதி செய்ய முடியும் எனவும் நான் பெரிதும் நம்புகிறேன் எனவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 600 | 400 | 400 | 400 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 160 | 200 | -- | -- |
| பச்சைமிளகாய் | 1300 | 1300 | 800 | 1100 | 1000 | 1050 |
| தக்காளி | 600 | 600 | 600 | 700 | 500 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150 | 200 | 90 |
| கோவா | 300 | 250 | 300 | 400 | 250 | 250 |
| கரட் | 550 | 530 | 600 | 500 | 500 | 400 |
| பூசணி | 150 | 150 | 120 | 200 | -- | 140 |
| புடோல் | 250 | 300 | 300 | 300 | 300 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 200 | 120 | 130 |
| சின்ன வெங்காயம் | 300 | 150 | 300 | 400 | 200 | 330-380 |
| பெரிய வெங்காயம் | 250 | 160 | 180 | 180 | 150 | -- |
| பாகற்காய் | 800 | 700 | 500 | 1000 | 600 | 450 |
| வெண்டக்காய் | 400 | 300 | 300 | 400 | 300 | 250 |
| கருணைக் கிழங்கு | 250 | 260 | 150 | 400 | -- | 220 |
| பயற்றங்காய் | 500 | 500 | 400 | 600 | 500 | 300 |
| லீக்ஸ் | 500 | 550 | 600 | 600 | -- | 400 |
| பீற்றூட் | 850 | 700 | 1000 | 800 | 1000 | 650 |
| கறிமிளகாய் | 1200 | 800 | 800 | 900 | 800 | 950 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 600 | 500 | 800 | 600 | 450 | 430 |
| கத்தரிதம்புள்ள | 300 | 450 | 400 | 350 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 60-140 | 250 | 140 | -- | 140 |
| தேசிக்காய் | 700 | 300 | 300 | 200 | 300 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 200 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 500 | -- | 475 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 1000 | 800 | -- | - |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 300 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 110 | 150 | 80 | -- | 40 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 | -- | 70 |
| ஈரப்பலா | 150 | 100-150 | 100 | 120 | -- | 90 |

# இராசிபலன்

10.01.2026
மார்கழி 26, சனிக்கிழமை
சப்தமி பிற்பகல் 12.32 மணிவரை
அத்தம் முன்னரவு 7.30 மணிவரை

சுபநேரம் 3.33-5.03 மணிவரை
இராகுகாலம் 9.33-11.03 மணிவரை

சந்திராஷ்டமம்-
சதயம், பூரட்டாதி.

வளவன்

**மேஷம்** தொழில் வியாபாரத்தில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்** பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**சிம்மம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், கண்ணியம் மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**துலாம்** பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்ப உறுப்பினர்களின் சொற்களை கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்** தொலைபேசிவழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் பகை அகலும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், தன வரவுகள் திருப்திகரமாக அமையும்.

**மகரம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், தேக நலனில் தெளிவு பிறக்கும்.

**கும்பம்** நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மீனம்** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வழிபாடு ஆனந்தம் தரும், கனவுப் பலிதமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

பொய்யன் உண்மை சொல்லும் போது கூட யாராலும் நம்பப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 951





தங்களால் விபத்து நேர்ந்ததென்று சொல்லா விட்டாலும் தாங்கள் ஏன் அதைத் தடுக்கவில்லை என்று கேட்பார்கள்! ஆனால் தங்களுடைய வஜ்ராயுதம் போன்ற கரங்களாலும் கரிகாலனுக்கு வரப்போகும் விபத்தைத் தடுக்க முடியாது.

ஆகையால், தாங்கள் உடனே போய்விட வேண்டும். என்னைத் தங்களுடன் அழைத்துக் கொண்டு போனால், அதைப் பற்றியும் வீண் சந்தேகம் ஏற்படும். முன்னதாக தெரிந்திருந்த படியினால் என்னையும் அழைத்துக் கொண்டு போய்விட்டதாகச் சொல்வார்கள்.

ஆகையால், தாங்கள் மட்டுமே போகவேண்டும். என்ன நேர்ந்தாலும், எப்படி நேர்ந்தாலும் அதனால் தங்களுக்கு அபகீர்த்தி எதுவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள நான் இங்கிருப்பேன்.

ஐயா! என்னிடம் அவ்வளவு நம்பிக்கை தங்களுக்கு உண்டா?" என்று நந்தினி கேட்டுவிட்டுத் தன் கரிய பெரிய விழிகளால் பழுவேட்டரையரின் நெஞ்சை ஊடுருவிப் பார்ப்பவள் போலப் பார்த்தாள்.

பாவம்! அந்த வீரக் கிழவர் நந்தினியின் சொல்லம்பினால் பெரிதும் கலங்கிப் போயிருந்தார். அவளுடைய கண் அம்புக்கு முன்னால் கதிகலங்கிப் பணிந்தார்.

## 40ஆம் அத்தியாயம் நீர் விளையாட்டு

இந்த வரலாறு நிகழ்ந்த காலத்துக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் மூவேந்தர்களைத் தவிர, சிற்றரசர்கள் எழுவர் புகழ்பெற்று விளங்கினார்கள்.

அவர்களுக்கு "வள்ளல்கள்" என்ற பட்டப் பெயரும் வழங்கி வந்தது. அந்த எழுவரில் ஒருவன் கொல்லி மலையின் தலைவனான ஓரி என்பவன். இவன் வில் வித்தையில் இணையில்லாத வீரன் என்று பெயர் பெற்றிருந்தான்.

இவன் தன் வலிய பெரிய வில்லை வளைத்து நாணேற்றி அம்பை விட்டானாயின், அது இராம பிரானுடைய அம்பு ஏழு மரங்களைத் தொளைத்தது போல் முதலில் ஒரு புலியைத் தொளைத்து, பிறகு ஒரு மானைத் தொளைத்து பிறகு ஒரு பன்றியை தொளைத்து, பின்னர் ஒரு முயலைத் தொளைத்து விடுமாம்.

இவ்வாறு புலவர்களால் அவனுடைய வில் வித்தைத் திறன் பாடப் பெற்றிருந்தது. அதிலிருந்து அவன் "வல்வில் ஓரி" என்று குறிப்பிடுவதும் வழக்கமாயிற்று.


கொல்லி மலை வல்வில் ஓரியின் மீது, அந்நாளில் வலிமை பெற்ற வேந்தனாக விளங்கிய சேரன் கோபம் கொண்டான். அவனைத் தாக்குவதற்குத் திருக்கோவலூர்த் தலைவன் மலையமான் திருமுடிக் காரியின் துணையை நாடினான். காரியின் வீரம் ஓரியின் வீரத்துக்கு குறைந்ததன்று.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்பை அன்பால் எடு



துறவியிடம் வந்த ஒருவன் "சாமி என் மனைவியின் தொல்லை தாங்க முடியவில்லை". எந்நேரமும் என்னுடன் சண்டை போட்டுக் கொண்டே இருக்கிறாள்.

அவளோடு ஒத்து வாழ இனி என்னால் முடியாது. அவளை விட்டுப் பிரிந்து நான் அவளுக்குத் துன்பம் தர வேண்டும். தாங்கள் தான் எனக்கு வழிகாட்ட வேண்டும்" என்று வேண்டினான்.

"நீ உண்மையாகவே உன் மனைவியிக்குத் துன்பம் தர வேண்டுமென்று நினைக்கிறாய். அப்படித்தானே" என்று கேட்டார் துறவி.

"ஆமாம்" என்றான் வந்தவன்.

"நீ இப்பொழுது உன் மனைவியைப் பிரிந்து செல்வதால் அவள் துன்பப்படுவாளா? மகிழ்ச்சி அடைவாளா?" என்று கேட்டார் அவர்.

"சொல்ல முடியவில்லை. அவள் மகிழ்ச்சி அடைந்தாலும் அடையலாம்" என்றாலும் அவள் மீது அன்பைக் கொட்டு அதன் பிறகு நீ அவளைப் பிரிந்தால் அவள் துன்பப்பட்டே ஆக வேண்டும்.

மூன்று மாதம் கழித்து உங்கள் வீட்டிற்கு வருகிறேன். சரிதானே" என்றார் அவர்.

வந்தவனும் அப்படியே செய்வதாகச் சொல்லி விடை பெற்றான்.

மூன்று மாதம் கழித்து துறவி அவன் வீட்டிற்கு வந்தார். என்ன இப்பொழுது பிரிந்து செல்லத் தயாராக உள்ளாயா?" என்று கேட்டார்.

"துறவியாரே நான் எதற்காக என் மனைவியை விட்டுப் பிரிய வேண்டும். நானும் அவள் மீது உயிரை வைத்திருக்கிறேன்.

அவளும் என் மீது உயிரையே வைத்து இருக்கிறாள். நீங்கள் சொன்னபடி அவள் மீது அன்பு காட்டிய போது தான் அவள் என் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் என்று அறிய முடிந்தது.

இனி எங்களுக்குள் பிரிவே வராது. தாங்கள் செல்லலாம்" என்றான் அவன்.

தன் எண்ணம் ஈடேறிய மகிழ்ச்சியில் துறவியும் அங்கிருந்து புறப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இவர்கள்தான் மதகுரு என்றால் நாடு எங்ஙனம் உய்வுபெறும்

சமயம் என்ற சொல் சமைத்தல் என்ற வினையடியில் இருந்து தோற்றம் பெறுகிறது.

சமைத்தல் என்பது உண்பதற்கு ஏற்றவாறு பதப்படுத்துவது எனப் பொருள்படும்.

ஆக, வாழ்க்கைக்கு ஏற்றவாறு மனிதர்களைப் பக்குவப்படுத்துவது சமயம்.

இங்கு சமயம் என்பது மொழிக்கு மொழி மதத்துக்கு மதம் வேறுபட்டிருந்தாலும் அவற்றின் நோக்கம் மனிதர்களைப் புனிதர்களாக்குவது.

உண்மை. சமய தத்துவங்களும் சமயப் போதனைகளும் அன்பு, அகிம்சை, இரக்கம் என்பவற்றை வலியுறுத்தி இந்த வையகத்தில் மனிதர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தை அடைவதற்கான வழியைக் காட்டி நிற்பதாகும்.

எந்தச் சமயத்திலும் கடவுள் பேசுவதாக வரலாறு இல்லை. இங்குதான் குருவழிபாடு என்பது முதன்மை பெறுகிறது.

அதாவது சாமானிய மனிதனுக்கு கடவுள் எனும் மாபெரும் சக்தியை உணர்த்துகின்ற ஞானத்தை உபதேசிப்பது குருவின் கடமையாம்.

இங்குதான் மதகுரு என்பவர் ஒவ்வொரு சமயத்திலும் முதன்மை பெறுகின்றார்.

எனினும் சமகாலத்தில் மதகுருமார் அறம் பிழைத்து, எந்த நோக்கத்துக்காக தம்மை ஈடுபடுத்தினார்களோ அவற்றை மறந்து மிக மோசமாக நடந்து கொள்ளும் அளவுக்கு வந்துவிட்டனர்.

இதற்கு எங்கள் நாட்டில் இருக்கக்கூடிய ஒரு தரப்பு பௌத்த பிக்குகள் தக்க உதாரணமாவர்.

ஆம், நடைமுறையில் சில பௌத்த பிக்குகள் மிகமோசமாக நடந்து கொள்வதைப் பார்க்கின்றோம். ஒரு தெருவில் மதுபோதையில் நின்று ரகளை செய்கின்றவர்களை விடவும் மோசமானவர்களாக சில பௌத்த பிக்குகளின் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இத்தகையவர்கள் சண்டித்தனம் செய்வதற்கும் மற்றவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கும் தயாராக இருக்கின்றனர்.

இதைவிட ஆபாசவார்த்தைகள், மற்றவர்களை அவமதிக்கும் சொற்பிரயோகங்கள், நிதானத்தை இழந்து உச்சமாகக் கோபமடைதல் என்பவற்றைப் பார்க்கும்போது இத்தகைய தேரர்களால் எங்ஙனம் ஆரோக்கியமான – கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுகின்ற மனித சமூகத்தை உருவாக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது.

இதற்கும் மேலாக, அரசியல் சார்ந்து சில பௌத்த பிக்குகள் உச்சரிக்கின்ற வார்த்தைப் பிரயோகங்கள் அரசியல்வாதிகள் பரவாயில்லை என்று கூறுமளவுக்கு நிலைமையை ஆக்கியுள்ளது.

ஆம், அண்மையில் ஒரு பௌத்ததேரர்; ஒரு பெண் என்றும் பாராமல் இந்த நாட்டின் பிரதமரை இழிவுபடுத்தி பேசுவதைப் பார்க்கும் போது, சீ! நரகத்து முள்ளுகள் அன்றோ இவர்கள் என்று எண்ணத் தோன்றும்.

# சிறுமி டினோஜாவின் மரணம் துரித விசாரணைகள் ஆரம்பம்

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்த 12 வயது சிறுமி குகநேசன் டினோஜாவின் மரணம் குறித்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகளின் பிரகாரம் சுகாதார அமைச்சு மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில், பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

கடந்த மாதம் ஒவ்வாமை காரணமாக சிறுமி முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் டிசம்பர் 21 ஆம் திகதி மரணித்தமை கவலையளிக்கிறது.

தற்போது வைத்தியசாலை மற்றும் மாகாண மட்டத்தில் தனித்தனியாக முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின் அறிக்கைகள் சுகாதார அமைச்சுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்த அறிக்கைகளின் பிரகாரம் வைத்தியசாலையின் பணிக்குழாமினரின் அசமந்தப் போக்கினாலேயே இந்த மரணம் இடம்பெற்றுள்ளது என்பது குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த விசாரணைகளுக்குப் பாதிப்பாக அமையாத விடயங்களை எதிர்வரும் நாட்களில் பாராளுமன்றில் வெளிப்படுத்துவோம் என்றார். (ம-7)

### நயினை நாகபூசணி அம்மன் கோவில்

## விசேட பொதுக்கூட்டத்திற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் அறங்காவலர்களுக்கிடையே வழக்கு நிலவி வரும் நிலையில் நாளை (11) நடைபெறவிருந்த விசேட பொதுக்கூட்டம் மற்றும் அறங்காவலர் சபைக் கூட்டத்திற்கு ஊர்காவற்றுறை நீதிமன்று இடைக்காலத் தடை விதித்து கட்டளை பிறப்பித்துள்ளது.

வழக்காளியால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், கடந்த 10.09.2025 அன்று நீதிமன்றம் வழங்கிய கட்டளைகளை மீறும் வகையில் எதிராளிகள் தன்னிச்சையாகச் செயற்படுவதாக மன்றுக்குச் சுட்டிக்காட்டினர்.

இதனையடுத்து ஏற்கனவே நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டுதல்களுக்கு முரணாக, 11.01.2026 அன்று (நாளை) கூட்டப்படவிருந்த விசேட பொதுக் கூட்டம் மற்றும் அறங்காவலர் சபைக் கூட்டம் ஆகியவற்றை உடனடியாக நிறுத்துமாறு மன்று கட்டளை பிறப்பித்தது. (ம-7)

### 30 இலட்சம் பெறுமதியான

## மரக்குற்றிகள் கடத்தல் பொலிஸாரால் முறியடிப்பு

(கைதடி)

காலாவதியான அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திற்கு சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகளை சட்டவிரோதமான முறையில் கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியை கைதடிப் பகுதியில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் அதிரடியாக முறியடித்ததுடன் மரக் குற்றிகளையும் கைப்பற்றினர்.

நேற்று (09) வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கைதடி ஏ9 வீதிப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மரக் குற்றிகளை ஏற்றிவந்த ஹன்ரர் வாகனத்தை மறித்து சோதனை செய்திருந்த நிலையிலேயே காலாவதியான அனுமதிப்பத்திரத்தைப் பாவித்து மரக்கடத்தலில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது.

அதனையடுத்து வாகனச் சாரதியை கைது செய்த பொலிஸார் வாகனத்தையும், மரக் குற்றிகளையும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணையில் தேக்கு, வேம்பு போன்ற சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த மரக்குற்றிகளே இவ்வாறு கடத்திவரப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின் கைதான சந்தேக நபரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,30)

### நாட்டை உலுக்கும்

## துப்பாக்கிச் சூட்டு கலாசாரம் நேற்றும் ஒருவர் உயிரிழப்பு

(தெஹிவளை)

கொழும்பு, தெஹிவளை - மெரைன் ட்ரைவ் பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் குறித்த பகுதியிலுள்ள விருந்தகம் ஒன்றின் உரிமையாளரை இலக்கு வைத்தே இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான விருந்தகத்தின் உரிமையாளர் காயங்களுடன் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

## வருடாந்த கலைவிழா

(யாழ்ப்பாணம்)

இருபாலை கற்பகப் பிள்ளையார் முன்பள்ளியின் 2025-ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கலைவிழா, நாளை ஞாயிற்றுக்கிழமை (11) பிற்பகல் 2.00 மணியளவில் முழுமதி சனசமூக நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவி திருமதி வெ. அமிர்தாம்பிகை அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேசசபை தவிசாளர் தியாகராசா நிரோஷ் அவர்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பாதாள உலகக் குழு உறுப்பினர் 'கொண்ட ரஞ்சி' டுபாயில் கைது

(டுபாய்)

பாதாள உலகக் குழு உறுப்பினரான "கொண்ட ரஞ்சி" என்ற ரஞ்சித்குமார, இத்தாலிக்குத் தப்பிச் செல்ல முயன்றபோது டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்நாட்டு பாதுகாப்புப் பிரிவினரால் குறித்த சந்தேகநபர் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் கைது செய்யப்பட்ட நிலையில், பின்னர் மனைவியும் பிள்ளைகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.


முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் ஒருங்கிணைப்புச் செயலாளரின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில், பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஒருவரே இந்த "கொண்ட ரஞ்சி" என்ற ரஞ்சித்குமார எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் தற்போது டுபாய் பொலிஸ் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2026

## அனுகூலமான திருப்பங்கள் உண்டாகும்!



**நல்ல உள்ளம் படைத்த மீன இராசியினரே! எதிர்பார்த்த இலக்கை அடைய விரும்பும் மீன இராசியினருக்கு 2026 ஆம் ஆண்டு செல்வாக்கை உயர்த்தி தரும் ஆண்டாக அமைய நல்வாழ்த்துக்கள்.**

எந்த ஒரு காரியத்திலும் துணிந்து இறங்கி செயற்பட்டு வெற்றி பெறும் தைரியம் உண்டாகும். சுகபோக வாழ்க்கை கிடைக்கும். உங்களின் தனித் திறமைகள் வெளிப்படும். லௌகீக நாட்டம் அதிகரிக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு மேன்மையான காலம். விரும்பிய காரியத்தை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். பொறுப்புடன் செயற்படுவீர்கள். உங்கள் செயலிலும் பேச்சிலும் அறிவு மேம்படும்.

**குருவின் சஞ்சார பலன்கள்**

மீன இராசியின் அதிபதி மற்றும் தொழில் ஸ்தான அதிபதியான குரு பகவான் வருடத் தொடக்கத்தில் மே மாதம் வரை 4ஆம் இடத்திலும் ஜூன் மாதம் முதல் பஞ்சம ஸ்தானத்திலும் சஞ்சரிப்பார். இதுவரை வெளி உலகத்திற்கு தெரியாமல் இருந்த திறமைகள் வெளிப்படும். புகழ், அந்தஸ்து, கௌரவம் உயரும். வீடு, வாகன யோகம் கிடைக்கும். அரசு வழியில் எதிர்பாராத சலுகைகள் கிடைக்கும். மனம் மகிழும் சம்பவம் நடைபெறும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். உடன் பிறந்தவர்களுடன் தாய் வழிச் சொத்து விடயத்தில் சிறு சலசலப்பு ஏற்படும். பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுப் பெறுவதால் புத்திர பிராப்தம் உண்டாகும். அதிஷ்டம் சார்ந்த ஆதாயம் உண்டாகும்.

கடந்த கால கடன்கள், பிரச்சினைகள் எல்லாம் நிவர்த்தியாகும். உயர்கல்வி முயற்சி சாதகமாகும். வருமானம் சீராக இருந்தாலும் சமாளிக்க முடியாத விரயங்களும் ஏற்படும். சிலருக்கு அதிக சம்பளத்தில் வெளிநாட்டு வேலை கிடைக்கும். சிலர் ஊர் மாற்றம் அல்லது வீடு மாற்றம் செய்யலாம். அதிஷ்ட பொருள், பணம், நகை, உபரி வருமானம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சேமிப்புகள் அதிகரிக்கும். புதிய தொழில் முயற்சிக்கு உகந்த நேரம் அல்ல. உத்தியோகத்தில் நல்ல பெயர் கிடைக்கும்.

**சனியின் சஞ்சார பலன்கள்**

மீன இராசிக்கு இலாபாதிபதி மற்றும் விரயாதிபதியான சனிபகவான் ஜென்ம இராசியில் ஆண்டு முழுவதும் சஞ்சரிப்பார். புண்ணிய பலன்கள் நடக்கும். மன வலிமை அதிகரிக்கும். திருமணத்திற்கு இந்த வருடம் நாள் குறிக்கலாம். எதிர்பார்த்த இடத்திலிருந்து பண உதவி கிடைக்கும். சிலர் வீட்டு கிரக பிரவேசத்திற்கு தயாராகுவார்கள். தனியார், அரசு ஊழியர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு, சிறப்பு சலுகைகள் கிடைக்கும். பெண்கள் வேலை பார்க்கும் இடத்திற்கு விசுவாசமாகவும், நன்றியுடனும் இருப்பார்கள்.

தாயின் அன்பும், தாய்வழி உறவுகளின் ஆதரவும் மகிழ்ச்சியை அதிகரிக்கும். மூதாதையர் சொத்தில் அனுகூலமான திருப்பங்கள் உண்டாகும். சிலருக்கு பிள்ளைகள் மூலம் வீடு, வாசல் யோகம் உண்டாகும். சிலருக்கு சமூகத் தொண்டு செய்யும் ஆர்வம் உண்டாகும். சிலர் ஆன்மிகத்தை பயன்படுத்தி பொருள் சம்பாதிக்க முயலலாம்.

வெளிநாட்டில் வேலை பார்த்த சிலர் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் விருப்பத்திற்காக வேலையை விட்டு தாயகம் திரும்புவார்கள். பலவீன மனத்தினர் சிலர் மாந்திரீகம், அருள் வாக்கு கூறும் இடம் என அலைந்து மன நிம்மதிக்கான மார்க்கத்தை தேடுவார்கள். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நீடிக்கும். குல தெய்வ அருள் கிடைக்கும். பேச்சில் நிதானமும் பொறுமையும் அவசியம். ஜென்மச் சனி உள்ளதால் எதையும் பல முறை சிந்தித்து செயற்படுத்த வேண்டும்.

ராகு கேதுவின் சஞ்சார பலன்கள் 2026ஆம் ஆண்டின் தொடக்கத்தில் விரயஸ்தானத்தில் ராகு பகவானும் ருண, ரோக சத்ரு ஸ்தானத்தில் கேது பகவானும் நின்று பலன் தருவார்கள். டிசெம்பர் 5, 2026 முதல் ராகு பகவான் இலாப ஸ்தானத்திலும் கேது பகவான் பஞ்சம ஸ்தானத்திலும் சஞ்சரிப்பார்கள். ஜென்மச் சனியின் தாக்கத்தால் தொழிலில் சிறு சுணக்கம் ஏற்பட்டாலும் குரு பார்வை இராசிக்கு இருப்பதால் பெரும் பாதிப்பு ஏற்படாது. உத்தியோகத்தில் மதிப்பும், பதவி உயர்வும் கிடைக்கும். நல்லார் உறவும், நண்பர்கள் ஆதரவும் உறவினர்கள் ஒத்துழைப்பும் அமோகமாக அமையும். தொழிலில் சீரான முன்னேற்றம் இருக்கும்.

சொந்தத் தொழில் செய்பவர்கள் அதிக முனைப்புடன் விடாமுயற்சியுடன் செயற்பட்டால் பெரும் இலாபம் கிட்டும். தாய், தந்தை பொருள் உதவி செய்து தொழில் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பார்கள். பழைய கடன்களை அடைத்து ஆறுதல் அடைவீர்கள்.

திருமணம், குழந்தைப் பேறு, கல்விச் செலவு, வீடு கட்டும் செலவு, கோவில் பிரார்த்தனை நிறைவேற்றுதல் போன்ற சுப செலவு உண்டாகும். பண வரவுகள் சிறப்பாக இருந்தாலும் வீண் செலவுகளால் மன அமைதி குறையும்.

முன் கோபத்தில் பகைமை உருவாகும் என்பதால் பணியில் கவனத்துடன் செயற்பட வேண்டும். மாமனாரால் சிறு சிறு இன்னல்கள் தோன்றி மறையும். காரியத் தடையால் மனச் சஞ்சலம் அதிகரிக்கும்.

**பூரட்டாதி 4**

திருப்புமுனையான வருடம். தொழில் முயற்சிகள் பலிதமாகும்.




வருமானத் தடை அகன்று நிலையான முன்னேற்றம் உண்டாகும். தந்தையின் ஆரோக்கியம் முன்னேற்றமடையும். ஒரு சிலருக்கு தந்தையின் தொழிலை எடுத்து நடத்த வேண்டிய சூழ்நிலை உண்டாகும். வேலை மாற்றம் செய்வதை தவிர்ப்பது நல்லது. குடும்ப முன்னேற்றத்திற்கு சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள். சிலர் இன்சூரன்ஸ் பாலிசி எடுப்பார்கள். பெண்கள் புதிய தங்க நகைகள் வாங்கி அணிவார்கள்.

திருமணத்தடை விலகி விவாகம் நடைபெறும். பெண்களுக்கு மண வாழ்க்கை மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும். பகைவர்களால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். குடும்பத்தில் ஏதாவது செலவு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். அரசியல் வாதிகளுக்கு மக்கள் ஆதரவால் நிலையான அதிஷ்டம் கிடைக்கும். இந்த வருடம் திண்டாட்டம் மாறி கொண்டாட்டம் உலாவும். மேற்படிப்பிற்கான முயற்சி கைகூடும். பெண் களுக்கு தாய்வழி ஆதரவும், சீதன மும் கிடைக்கும். பொது வாழ்க்கை யில் இருப்பவர்களுக்கு தியாக மனப்பான்மை மிகுதியாகும்.

**உத்திரட்டாதி**

கடமைகள் நிறைவேறும் வருடம். இராசிக்கு சனி குரு சம்பந்தம் என கோட்சார கிரகங்கள் அனைத்தும் சாதகமாக உள்ளது. இதனால் ஆன்ம பலம் பெருகி ஆரோக்கியத் தொல்லை குறையும். தாய், தந்தையரின் விருப்பங்களையும், அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் நிறைவேற்றுவீர்கள். கை விட்டுப் போகும் நிலையில் இருந்த பூர்வீகச் சொத்தின் தீர்ப்பு சாதகமாகும்.

வேலை பார்க்கும் நிறுவனத்தில் சில அசௌகரியங்கள் நடந்தாலும் முதலாளிக்காக நன்றியுடன் வேலை செய்வீர்கள். இந்த கால கட்டத்தில் கல்வி நிறுவனங்கள், தர்ம ஸ்தாபனங்கள், வழிபாட்டு ஸ்தலங்களுக்கு உதவி செய்தால் பாக்கிய பலன்கள் அதிகரிக்கும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பிறக்கும். திருமணத்தடை அகலும்.

நல்ல வாழ்க்கைத் துணை கிடைக்கும். மூத்த சகோதர, சகோதரி, சித்தப்பா மூலம் பொருள் உதவி கிடைக்கும். சட்டச் சிக்கல் காரணமாக மன அமைதி குறையும் என்பதால் எந்த விதமான சட்டச் சிக்கலாக இருந்தாலும் நீதிமன்ற படி ஏறுவதை தவிர்த்து பேசித் தீர்க்க முயல வேண்டும். தினமும் மாலை 4.30 முதல் 6 மணிக்குள் சரபேஸ்வரரை வழிபடவும்.

**ரேவதி**

அதிஷ்டமும், யோகமும் கூடி வரும் வருடம். தன் நிறைவும் நிலையான நிம்மதியும் உண்டாகும். பிள்ளைகளின் படிப்பு, வேலை, சம்பாத்தியம், திருமணம், புத்திர பாக்கியம் போன்ற பலன்கள் சந்தோஷம் தரும்.

சமுதாய அங்கீகாரத்தை அதிகரிக்கும் நல்ல தொழில் வாய்ப்புகள் தேடி வரும். வேலை பார்ப்பவர்களுக்கு மேல் அதிகாரிகளின் அன்பும், ஆதரவும், பாராட்டும் கிடைக்கும். பாக்கிய பலத்தால் தாராளமான வரவு செலவு, பணப் புழக்கமும் உண்டாகும். கைநிறைய பணம் புரள்வதால் மனதில் நிறைவும் நெகிழ்ச்சியும் உண்டாகும். கடன் வாங்கி, அட்வான்ஸ் வாங்கி, போனஸில் கடனை கழித்து வாழ்க்கையை ஓட்டிய நடுத்தர வர்க்கத்தினரின் வருமானம் உயரும்.

பழைய கடனை அடைத்து புதிய வாழ்க்கைக்கு அஸ்திவாரம் அமைப்பீர்கள். சிலர் பணிச்சுமை அல்லது ஆரோக்கிய குறைபாடு காரணமாக விருப்ப ஓய்வு பெறலாம். தடைபட்ட சுபகாரியங்களும் முக்கிய பணிகளும் சுலபமாக நடந்து முடியும். நவீனமான பொருட்களை வாங்கும் வாய்ப்பு உள்ளது. சட்ட ரீதியான நெருக்கடிகள் நீங்கும். கடனாக கொடுத்திருந்த பணம் திரும்ப கிடைக்கும். பெண்களுக்கு மாதவிடாய் கோளாறு சீராகும். வள்ளி, தெய்வானையுடன் கூடிய முருகனை வழிபட சிறப்பான பலன் உண்டாகும்.

**பரிகாரம்:** வடைமாலை சாற்றி ஆஞ்சநேயரை வழிபட இனம் புரியாத அனைத்து பிரச்சினைகளிடம் இருந்து விடுபடுவீர்கள்.

(முற்றும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்...

கோக் நகரில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 35 வய தான அனுஷா ராஜகாந் என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 9 மணியளவில் Islington Avenue மற்றும் Dixon Road சந்திப் பில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புப் படையினர் பெண்ணைக் காப்பாற்ற முயற்சித்த போதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள் ளது.

உயிரிழந்த பெண் நடைபாதையில் வீதியைக் கடந்து செல்கையில், அவர் மீது வாகனம்மோதியுள்ளதாக ரொரன்ரோ பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## முல்லைத்தீவு...

செல்ல வாய்ப்புள்ளது.

அதனால், முல்லைத்தீவில் இன்று கனமழை மற்றும் கடுமையான காற்று நிலை ஏற்படலாம்.

முல்லைத்தீவு விவசாயிகள் நித்த கைக்குளம் மற்றும் தண்ணிமுறிப்பு பிரதேச வயல்களுக்குச் செல்வதை தவிர்க்குமாறும் மீனவர்கள் கடல் அலை உயர்வாக இருக்கும் அத னால் கரையோரப் பகுதியிலுள்ள மீன் பிடி உபகரணங்களைப் பாதுகாப் பான இடங்களில் வைத்துக்கொள்ளு மாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7,299)

## புதிய வீடுகளை...

பணிகள் மற்றும் இழப்பீடு வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று (09) நடைபெற் றது.

ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தலைமையில் இந்தத் திட்டம் ஆரம்பமானது.

அநுராதபுரம், குருநாகல் மாவட்டங் களில் இந்த வேலைத்திட்டம் ஆரம்ப மானதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் கல் னேவ, ஹந்துன்கம, இராஜாங்கனை, சிறிமாபுர பகுதிகளில் அனர்த்தத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக புதிய வீடுகளை நிர்மாணிக்கும் பணி யின் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற் றன.

அத்துடன் குருநாகல் மாவட்டத் தில் நிகவரெட்டிய, விதிகுலிய சந்தி, ரிதிகம, தொடம்கஸ்லந்த பகுதிகளை மையமாகக் கொண்டு இந்த நிகழ்வு கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ம-7)

## கல்வி முறையை...

உருவாக்கப்போவதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித் தார்.

அனர்த்தங்களினால் முழுமை யாகச் சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சி நேற்று அநுராதபுரம் இராஜாங்கனை வெவே விகாரைக்கு அருகில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டின் மாணவர் தலைமுறைக்கு சர்வதேசத்தை வெல்லக்கூடிய நவீன கல்வி முறை அவசியம் என்றும், கிரா மிய பிள்ளைகளை வறுமைச் சுழற்சி யில் இருந்து மீட்கக்கூடிய ஒரே வழி கல்வி மட்டுமே என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பொய்ப் பிரசாரங்களுக்கு அடிபணி யாமல், நாட்டுக்குத் தேவையான கல்வி மறுசீரமைப்பு செயல்முறை யைத் தொடர்ந்து முன்னெடுத்து, மாணவர்களுக்கு சிறந்ததொரு எதிர் காலத்தை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட் டார். (ம-7)

## போதை...

கைதான இருவரும் 26 மற்றும் 28 வயதுடையவர்கள். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புல னாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதை தடுப் புப் பிரிவினரால் இந்தக் கைது நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை களை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7,104)

## டக்ளஸ்...

மேலும் வெளிநாடு செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங் கப்பட்ட உத்தியோகபூர்வ துப்பாக்கி யொன்று ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவிடம் கைமாற்றப்பட்டமை தொடர் பில் அவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ம-7)

## இறுதி...

தெரிவித்துள்ளார்.

டித்வா சூறாவளியால் முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்குப் புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியை வழங்கும் ஆரம்ப நிகழ்வில் நேற்று பங்கேற்றபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், 2009 ஆம் ஆண்டு இறுதிப் போர் நிறைவடைந்த போதிலும் தற்போதும் இடம்பெயர்ந்த முகாம்களில் இன்னும் மக்கள் வசிக்கின்றனர்.

இவ்வாறுபோரினால் இடம்பெயர்ந்துள்ள மக்களைத் தேர்ந்தெடுத்து 2,500 வீடுகளை அமைக்க வீடொன்றுக்கு 20 இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளோம்.

இதுபோன்ற சுமார் 31,000 வீடுகளை அமைக்க நாங்கள் திட்டமிட்டிருந்த நேரத்திலேயே இந்தப் பேரழிவு காரணமாக சுமார் 20,000- 25,000 வீடுகளை அமைக்க வேண்டியுள்ளது.

இதேவேளை, மலையக மக்களுக்கு வீடுகளை அமைக்க இந்திய நிதியுதவியில் இலங்கை அரசாங்கமும் இணைந்து முன்

மொழிந்துள்ளது" எனத் தெரிவித் துள்ளார். (ம-7)

## இலங்கை...

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையில் தனது பதவிக் காலத்தை நிறைவு செய்யும் அமெரிக் கத் தூதுவர் ஜூலி சங், நேற்று (09) வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தைச் சந்தித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் விஜித ஹேரத் தனது 'X' சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவொன்றையும் இட்டுள் ளார்.

"தூதுவர் ஜூலி சங் தனது பதவிக் காலத்தில் இலங்கை - அமெரிக்க உறவுகளை வலுப்படுத்துவதற்காக மேற்கொண்ட அயராத முயற்சிகளுக் காக நான் அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டேன் என்றார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.01.09
சீட்டிழுப்பு இலக்கம் 6069
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 1 5 7 0 4 0

அத சம்பத
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 7 0 4 0
சீட்டிழுப்பு இலக்கம் 0644
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.01.09
சீட்டிழுப்பு இலக்கம் 185
கடகம் — வெற்றி இலக்கங்கள் 16 26 29 — 3771

தன நிதானய
திகதி - 2026.01.09
சீட்டிழுப்பு இலக்கம் - 2099
O 07 34 60 73 O
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Double Chance
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

மெகா பவர்
திகதி 09/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2417
வெற்றி எழுத்து F — சுப்பர் இலக்க 26 — வெற்றி இலக்கங்கள் 10 26 69 73
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

NLB ஜய JAYA
திகதி 2026.01.09
சீட்டிழுப்பு இலக்கம் 0337
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 2 5 9 0
இல.32,N.W.L. முதலிகே மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4311
சீட்டிழுப்பு திகதி | 09.01.2026
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 19 35 55 58
விசேட வெற்றி எழுத்து M
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.09
சீட்டிழுப்பு இலக்கம் 1378
கன்னி — வெற்றி இலக்கங்கள் 03 29 46 49 — கன்னி
தேசிய லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.01.2026 வெற்றி வாரம் 0777
ஆங்கில எழுத்து M — மற்றும் வெற்றி இலக்கம் 0 9 7 3 0 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,460,706.80
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3043 | வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2026.01.09 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 33 44 45 — ஆங்கில எழுத்து C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,214,503.20
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
திகதி 09.01.2026 வெற்றி வாரம் 5204 வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 05 14 38 78 — ஆங்கில எழுத்து K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,846,894.80
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 873
சீட்டிழுப்பு திகதி 09.01.2026 வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 | 19 | 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
இணையம் : www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4755 | வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 09.01.2026 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 23 35 53 — துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,433,020.40
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 35 02 16 22 38
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 2219
09.01.2026 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.619,222,669.40
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2869
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி : 2026.01.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,244,845.60
வெற்றி இலக்கங்கள் 32 40 52 74 — ஆங்கில எழுத்து P
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள்
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

Registered with Tertiary and Vocational Education Commission
under P25/0026 Established in 1972
Kaithady Manipay Road, Maruthanaarmadam, Chunnakam, Sri Lanka
Telephone No: 021224 1420 E-mail:-jcinstituteofagriculture@gmail.com

### தேசிய தொழில்த்தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள் க.பொ.த (உயர்தரம்) சித்தியடையாதோர், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழிற் தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.


விவசாய உதவியாளர் பயிற்சிநெறிகள் (Field Assistant Agriculture)

1. தேசிய தொழில் தகைமை மட்டம் 3 (4 மாத காலப்பயிற்சி நெறி )
   தகைமை - க.பொ.த சாதாரண தரம்.
2. தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (6 மாத காலப்பயிற்சி நெறி)
   தகைமை - NVQ மட்டம் 3 அல்லது க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாய பாடத்திலும் சித்தியடைந்திருத்தல்.

(6503)

வயதெல்லை : 16–24
பயிற்சிக்கட்டணம் இலவசம்

விண்ணப்ப முடிவுத் திகதி : 21.01.2026



மேலதிக விபரங்கள் :
அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம், சுன்னாகம்.
தொலைபேசி :- 021 224 1420
மின்னஞ்சல் : jcinstituteofagriculture@gmail.com



## மணப்பெண் தேவை

01. கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, civil Engineer Singapore மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
02. அளவெட்டி, இந்து, 1989, பரணி, Senior software engineer, canada citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
03. கொல்லன்கலட்டி - புன்னாலைக்கட்டுவன், 1991, அனுஷம், இந்து, MSc, Denmark citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
04. மட்டுவில் – மீசாலை, இந்து, 1985, கேட்டை, computer Engineer மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
05. Jaffna - town, இந்து, 1996, சதயம், BSc Software Engineer, Newzeland citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
06. காரைநகர், இந்து, 1982, ரேவதி, Engineer, UK citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
07. Jaffna, இந்து, 1993, சதயம், Software Engineer, Australia citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
08. காரைநகர், இந்து, 1988, பரணி Masters, Australia citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
09. கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Divorce, Australia citizen மாப்பிள்ளைக்கு மணப்பெண் தேவை.
10. வட்டுக்கோட்டை, இந்து, 1988, ஆயிலியம், B.Com, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(C-4790)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728


## தீ விபத்து

காலி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நேற்று (09) இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ பரவியதையடுத்து, உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் காலி மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினருடன் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை.

(ம-7)


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரிலிருந்து 2 Km தூரத்தில் நுணாவில் - கல்வயல் வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(பிரித்தும் எடுத்துக் கொள்ளலாம்)
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :
077 32 55 474

(6490)

## காணி விற்பனைக்கு

A9 வீதி புத்தூர் சந்தியிலிருந்து சரசாலை நோக்கி 400m தூரத்தில் வலது புறமாக உள்ள ஒழுங்கையில் 2 ஆவது காணி 37 பரப்பு தென்னம் தோட்டம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
071 856 1927
077 325 5474

(6490)



## பணிப்பெண் தேவை

இரண்டு வயோதிபர்களுக்கு சமையல் வேலை மற்றும் ஏனைய வேலைகள் செய்வதற்குப் பணிப் பெண் தேவை.
(அவர்களைப் பராமரிக்கத் தேவையில்லை)
நாவலர் றோட், யாழ்ப்பாணம். தொடர்பு : 077 3611 282

(6536)


## மரண அறிவித்தல்

பிறப்பு 1945 - 11 - 26



இறப்பு 2026 - 01 - 06

### கதிர்காமத்தம்பி சித்திரவேல்

திருகோணமலை சாம்பல்தீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி செல்வாநகரையும், தற்போது மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணத்தையும் வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி சித்திரவேல் அவர்கள் கடந்த 06.01.2026 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் நாகரட்ணம் ஆகியோரின் மருமகனும் புஸ்பரட்ணம் (புஸ்பம்) அவர்களின் அன்புக் கணவரும் சங்கீதா, காலஞ்சென்ற சஞ்ஜீவ் மற்றும் சுஜீவ் ஆகியோரின் அன்புத் தந்தையும் கம்சன், ஜெனித்தா ஆகியோரின் மாமனாரும் அஸ்னா, அஸ்மித் ஆகியோரின் பேரனும் இராமநாதனின் சகோதரனும் மற்றும் ஜெயம், மகேஷ், கருணா, லக்னா, கமலேஷ், மனோகரன், செல்வி ஆகியோரின் மைத்துனரும் தேவன், சண்முகம், ரவிச்சந்திரன் செல்வி, வசந்தி, ராணி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்துப்பனையடி, அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாகியப்பிட்டி சந்தி,
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். (6524)

தகவல் :- குடும்பத்தினர்
077 036 6552


## வட இந்திய யாத்திரை

### காசி அயோத்தி சீரடிபாபா யாத்திரை

ஆரம்பம் : 10.03.2026 நாட்கள் : 15 யாத்திரிகர்கள் : 15
தரிசிக்குமிடங்கள்

டெல்லி, அட்சயதாம், நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு, இந்தியா கேற், வேறு இடங்களும் பார்க்கலாம், ஆக்ரா, தாஜ்மகால், செங்கோட்டை, மதுரா, கிருஷ்ணஜென்ம பூமி, பிரேம்மந்திரம், அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு, சங்கராச்சாரியார் மண்டபம், கயா, முன்னோர்களுக்கு பிதுர்கடன் சிரார்த்தம் செய்யும் இடம், புத்தகாய, புத்தாலயங்கள், காசி விஸ்வநாதர், விசாலாட்சி, காலபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்

மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் காசியில் 3 நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம், சனி சிங்கனாப்பூர், இன்னும் பல இடங்களும் போகலாம், சீத்தாமடி, சீதை பூமியுள் புதையுண்ட இடம், திரியம்பகேஸ்வரர், ஜோதிலிங்கமும் மற்றும் இராமேஸ்வரம் 21 தீர்த்தமாடல், இராமேஸ்வரலிங்க வழிபாடு (சிவதரிசனம்), நவபாஷாணம், திருப்புலானி, உத்தரகோச மங்கை பார்த்து மதுரை மீனாட்சி தரிசனம் முடித்து சென்னை வருகை.

ஒரு நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்

பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்

5விமானப் பயணங்கள், 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு, ரீ, கோப்பி, மினரல் வோட்டர், AC வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும் விபரங்களைக் கேட்டுப் பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11. 077 736 2154
E-mail - sriranganathan2601@gmail.com

(1901)



## Happy Supermarket - உரும்பிராய்




| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3 Kg |
| 1Kg கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 229/= | |
| 1Kg சர்க்கரை | - 235/= | |
| 01 டசின் தீப்பெட்டி | - 155/= | ~~240/=~~ |
| 01 பெட்டி கற்பூரம் | - 290/= | ~~390/=~~ |
| 01 மங்களம் ஊதுபத்தி | -135/= | ~~150/=~~ |

உங்கள்
Happy Supermarket
உரும்பிராயில்
பொங்கல் பொதி
ஒன்றை கொள்வனவு செய்து
Happy go green bag ஒன்றினை
இலவசமாக பெற்றிடுங்கள்.




| SIZE | PRICE |
|---|---|
| 10 | - 590/= |
| 12 | - 770/= |
| 14 | - 890/= |
| 16 | - 990/= |

(1909)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல. 90, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org